# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர்!

## நேற்று (23 – 7 – 2025) நிகழ்வுகள்!



**1. தூத்துக்குடி-மும்பைக்கு புதிய ரயில் எப்போது?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



தூத்துக்குடிக்கும் மும்பைக்கும் இடையே மேம்படுத்தப்பட்ட ரயில்வே இணைப்புக்கான முக்கியத்துவம் வாய்ந்த தேவை இருப்பதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா என்றும் இதன் அடிப்படையில் லோக்மான்ய திலக் எக்ஸ்பிரசை (ரயில் எண். 11043/11044) தூத்துக்குடிக்கு நீட்டிப்பதன் மூலமோ அல்லது புதிய நேரடி ரயில் சேவையை அறிமுகப்படுத்துவதன் மூலமோ இத்தேவையை நிறைவேற்ற ஒன்றிய அரசு முனைந்திருக்கிறதா? என்றும் திமுக தூத்துக்குடி மக்களவை உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சேவை அறிமுகப்படுத்தப்படுவதற்கு கால நிர்ணயம் ஏதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா, தூத்துக்குடிக்கு ரயில் இணைப்பை மேம்படுத்த வேறு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி எழுப்பினார்.

**2. ராமேஸ்வரத்திற்கு புதிய ரயில் சேவைகள்**

**டி.ஆர்.பாலு கோரிக்கை!**



பாம்பனில் கடலில் ஒரு புதிய லிப்ட் பாலம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து ராமேஸ்வரத்திற்கு புதிய ரயில்கள் மற்றும் கூடுதல் சேவைகளை இயக்க வேண்டும் என திருப்பெரும்புதூர் திமுக மக்களவை உறுப்பினர் டி. ஆர். பாலு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேசமயம் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக புதிய பாம்பன் லிப்ட் பாலம் பல நாட்களாக செயல்படாமல் உள்ளது என்பதை குறிப்பிட்டு அதை விரைவில் சரி செய்யவும், அதன் கீழ் கப்பல்கள் செல்வதற்கு வசதியாக எப்போது மீண்டும் செயல்படும்? அதற்கான காலக்கெடுவின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. தமிழ்நாட்டிற்கான கல்வி உரிமை நிதி திருப்பிச் செலுத்தும் தொகை விடுவிக்காதது ஏன்?**

**திருச்சி சிவா கேள்வி!**



2019 முதல் 2021 வரையிலான நிதி யாண்டுகளுக்கான கல்வி உரிமை (RTE) திருப்பிச் செலுத்தும் நிதியை தமிழ்நாட்டிற்கு இன்னும் விடுவிக்காமல் இருப்பது குறித்து மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் திருச்சி சிவா எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர், தொடர்ந்து தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களையும் கேட்டுள்ளார். சமக்ர சிக்ஷா அபியானில் இருந்து RTE திருப்பிச் செலுத்தும் நிதிமுறையை துண்டிக்க சென்னை உயர்நீதிமன்றத்தின் சமீபத்திய உத்தரவை ஒன்றிய அரசுக்கு சுட்டிக்காட்டிய அவர், தேசிய கல்விக் கொள்கைகளை ஏற்க மறுத்த மாநிலங்களுக்கு RTE திருப்பிச் செலுத்துதல்கள் எவ்வாறு கையாளப்படும் என்பது குறித்து தெளிவான கொள்கையை ஒன்றிய அமைச்சகம் வெளியிடவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**4. இயற்கை பேரிடர்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள்**

**எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!**




புயல், மழை, பூகம்பம், வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பேரழிவை முன்னறிவிப்பதற்காக அரசாங்கம் முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அரக்கோணம் மக்களவை உறுப்பினர் ஜெகத்ரட்சகன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

புயல்கள் மற்றும் பிற இயற்கை பேரிடர்களால் தொடர்ந்து பாதிக்கப்படும் மாநிலங்களில் முன்கூட்டியே அறிவிக்கும் எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு இதுவரையில் ஏற்படுத்தியுள்ள நடவடிக்கைகள்பற்றிய விவரங்கள் என்ன? மற்றும் மழை, பூகம்பம், வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கான கடந்த ஐந்து ஆண்டுகளின் முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளின் பயன்பாடு மற்றும் அதன் மூலம் தடுக்கப்பட்டதைக் காட்டும் தரவு அரசாங்கத்திடம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**5. சைபர் குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு**

**பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி கோரிக்கை**



தேசிய சைபர் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மையம் (NCCC) பல்வேறு கட்டங்களாக செயல்படுத்தும் திட்டங்களின் விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக பொள்ளாச்சி தொகுதி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் NCCC க்காக ஒதுக்கப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட தொகை எவ்வளவு? காவல்துறை அதிகாரிகள், நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பிற பணியாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சைபர் குற்ற விழிப்புணர்வு பட்டறைகளின் எண்ணிக்கை என்ன? மற்றும் நாட்டின் சைபர் குற்றங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பைக் கையாள்வதில் பல்வேறு நிறுவனங்களிடையே முறையான ஒருங்கிணைப்பு உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. திறன் இந்தியா திட்டம் தோல்வி!**

**கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் கண்டனம்!**



ஒன்றிய அரசின் திறன் இந்தியா திட்டம் போதுமான வேலை வாய்ப்புகளை உருவாக்கத் தவறியதை சுட்டிக்காட்டி திமுக எம்.பி. கே. ஆர். என். ராஜேஷ்குமார் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

திறன் இந்தியா திட்டம் தோல்வியுற்றதற்கான காரணங்கள் என்ன? லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்திருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது ஆனால் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு அளிக்காமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன?

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன்களை வழங்குவதில் முறையான பயிற்சி உள்கட்டமைப்பை அரசாங்கம் உறுதி செய்யாததற்கான காரணங்கள் என்ன மற்றும் பயிற்சி பெற்ற நபர்கள் வேலைவாய்ப்பு பெறத் தகுதியானவர்களாகவும், நல்ல வேலைகளைப் பெறவும் திறன் இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு தரத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**7. வேளாண்மை கடன் சங்கங்களின் பற்றாக்குறை ஏன்?**

**எம்.எம்.அப்துல்லா கேள்வி**



கிராமப்புறப் பொருளாதாரத்தின் குறுகிய மற்றும் நடுத்தர கால கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய முதன்மை வேளாண்மை கடன் சங்கங்களின் (PACS-கள்) வளங்கள் போதுமானதாக இல்லை என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா என்று மாநிலங்களவையில் திமுக எம். பி. எம். எம். அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? திறமையான செயல்பாடுகள் மற்றும் முடிவெடுப்பதற்காக கூட்டுறவுகளில் தொழில்முறை மேலாண்மை கட்டமைப்புகளை மேம்படுத்த கடந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன மற்றும் கூட்டுறவு நிறுவனம் இல்லாத பஞ்சாயத்துகளில் PACS-களை நிறுவ அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8. பயணிகள் ரயில் கட்டண உயர்வு**

**சி.என்.அண்ணாதுரை, க.செல்வம், ச.முரசொலி கண்டனம்!**







ஜூலை 1, 2025 முதல் பயணிகள் ரயிலில் ஏசி பெட்டிகளுக்கான கட்டணங்கள் உயர்ந்துள்ளதை கண்டித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி என் அண்ணாதுரை, ஜி. செல்வம் மற்றும் ச. முரசோலி ஆகியோர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த கட்டண உயர்வால் மெயில்/ எக்ஸ்பிரஸ், பயணிகள், சூப்பர்ஃபாஸ்ட், வந்தே பாரத் போன்ற ரயில்களின் ஸ்லீப்பர், ஏசி, ஜெனரல் என அனைத்து வகுப்புகளும் பாதிக்கப்படும், மேலும்முன்மொழியப்பட்ட கட்டண உயர்வு காரணமாக, நீண்ட தூர மற்றும் புறநகர் அல்லாத வழித்தடங்களில், குறைந்த/நடுத்தர வருமானம் கொண்ட குழு மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவுகளின் அன்றாட பயணிகள் மீது ஏற்படக்கூடிய நிதிச் சுமையை ஒன்றிய அரசு உணர வேண்டும், குறைந்த வருமானம் கொண்ட பயணிகள், EWS, மூத்த குடிமக்கள் மற்றும் அத்தியாவசிய பயண வகைகளுக்கான சலுகைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளார்கள்.

அதேபோல் அதிகரித்து வரும் கட்டணங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தூரத்தின் விவரங்கள் மற்றும் சமீபத்திய கட்டண உயர்வின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் வருவாய் அதிகரிப்பு எவ்வளவு? வருவாய் உருவாக்கத்துடன் சலுகைகளையும் வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் என்ன? என்றும் கேட்டுள்ளனர்.

வெவ்வேறு வகுப்புகளுக்கான கட்டண உயர்வுகளை முடிவு செய்வதற்கு முன் ஏதேனும் பொது ஆலோசனையை ஒன்றிய அரசு கேட்டுள்ளதா என கேள்வி எழுப்பிய திமுக மக்களவை உறுப்பினர்கள், அதற்கான விவரங்களை வெளியிட கோரியுள்ளனர். புறநகர் ரயில் சேவைகளின் உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தவும் மற்றும் வண்டிகளை அதிகப்படுத்தவும் அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் மற்றும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் கேட்டுள்ளனர்.

**9. நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை முடிப்பதற்கான கால அவகாசம் என்ன?**

**தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!**



தமிழ்நாட்டில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்த நிலம் கையகப்படுத்தும் செயல்முறைக்கு அரசாங்கம் போதுமான நிதியை வழங்குகிறதா என்று நாடாளுமன்றத்தில் திமுக தென்சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதில் அவர், NHAI மற்றும் பிற அரசுத் துறைகள் வழங்கும் விலையுடன் ஒப்பிடும்போது நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் ஒரு ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நிர்ணயித்த சராசரி விலையின் விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள மற்றும் நடந்து வரும் ரயில்வே திட்டங்களுக்கு அரசாங்கம் போதுமான நிதியை வழங்கியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை விரைவாக முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் கேட்டுள்ளார்.

**10. தொடரும் இரயில் விபத்துகள். நடவடிக்கை என்ன?**

**சேலம் செல்வகணபதி கேள்வி!**



காலியாக உள்ள கெசட்டட் அல்லாத பதவிகளுக்கு ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்த ரயில்வே முடிவு எடுத்துள்ளது குறித்து திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோட்ட ரயில்வே மேலாளர்களுக்கு அவர்களை ஒப்பந்த அடிப்படையில் தன்னார்வலர்களாக நியமிக்க அதிகாரம் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? ரயில்வேயில் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட காலியாக உள்ள பதவிகளை நிரப்ப இந்த முறை பின்பற்றப்படுவது பற்றிய விவரங்கள் என்ன?

கடந்த சில ஆண்டுகளில் நடந்த அனைத்து ரயில் விபத்துகளுக்கும் பணியாளர் பற்றாக்குறையால் ஏற்பட்ட மனித தவறு முக்கிய காரணமாக இருந்தது. இது தொடர்பாக ரயில்வே எடுத்த திருத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**11. வானிலை முன்னறிவிப்பை வலுப்படுத்த வேண்டும்**

**டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!**



பேரிடர்காலங்களில் துரிதமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட உதவும் வகையில் ஒன்றிய அரசு ஏதேனும் மேம்பட்ட தொழில்நுட்பம் அல்லது பருவமழை முன்னறிவிப்பு மாதிரிகளை நடைமுறைப்படுத்தியுள்ளதா என்று திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த கேள்வி எழுப்பினார்.

அதில் அவர், கடலோர வெள்ளப் பாதுகாப்புகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் என்ன? நில அதிர்வு கண்காணிப்பு வலையமைப்புகளை விரிவுபடுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் பேரிடர் மீள்தன்மையில் அவற்றின் தாக்கம் என்ன? என்று கேட்டுள்ளார்.

சாதாரண மக்கள், குறிப்பாக விவசாயிகள், பருவமழை உள்ளிட்ட வானிலை முன்னறிவிப்பு எச்சரிக்கைகளை சரியான நேரத்தில் பெறுவதற்கு ஒன்றிய அரசு செய்துள்ள வசதிகள் என்ன? வறட்சியிலிருந்து மக்களையும் விவசாயிகளையும் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் உள்ளூரில் மேம்பட்ட வானிலை நிலையங்களை நிறுவுவதற்கான காலக்கெடு என்ன? என்றும் அவர் தனது நாடாளுமன்ற கேள்விகளில் குறிப்பிட்டுள்ளார்.

**12. இரண்டாவது சந்திப்பாக மாறுகிறதா போத்தனூர் ரயில் நிலையம்?**

**கோவை கணபதி ராஜ்குமார் கேள்வி**



போத்தனூர் ரயில் நிலையம் கோயம்புத்தூரின் இரண்டாவது சந்திப்பாக மாற்றப்படும் என்று ஒன்றிய அரசு கூறியிருந்ததை அடுத்து அது எப்போது மாற்றப்பட்டும் என நாடாளுமன்றத்தில் கோவை மக்களவை உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். சேலம் கோட்டத்தில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களில் போத்தனூர் ரயில் நிலையம் உட்பட அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளின் நிலை என்ன? மேற்படி நிலையத்தில் பல்வேறு மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு? பணிகள் நிறைவடைய தேவைப்படும் கால அவகாசம் என்ன? என்று பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

**13. தென்காசி - கொல்லம் பாதையில் எப்போது மீண்டும் நேரடி ரயில் சேவை தொடக்கம்?**

**தென்காசி ராணி ஸ்ரீகுமார் கேள்வி**



2018 ஆம் ஆண்டில் ரயில் பாதை மாற்றம் முடிந்த போதிலும், திருநெல்வேலி - பாவூர்சத்திரம் - தென்காசி-கொல்லம் பாதையில் நேரடி பயணிகள் ரயில் சேவைகளை மீண்டும் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் தென்காசி திமுக மக்களவை உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

தாமத்திற்கான காரணம் என்ன என்று கேட்டிருக்கும் அவர், அன்றாடம் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்க இந்த ரயில் சேவைகளை மீண்டும் உடனடியாக தொடங்க வேண்டும் என கேட்டுள்ளார். தென்காசி மாவட்டத்தில் வசிப்பவர்கள் எழுப்பும் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும், ரயில் சேவைகளை சரியான நேரத்தில் மீட்டெடுப்பதை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? அவர் கேட்டுள்ளார்.

# கல்விப்பணிக்கு கோயில் நிதி ! – ஒரு பார்வை

கோயில் நிதியைக் கல்லூரிகள் கட்டப் பயன்படுத்துவது தொடர்பான சர்ச்சை அண்மையில் தமிழ்நாட்டில் தலைதூக்கி இருக்கிறது. அரசியல் விவாதங்களைக் கடந்து, சமயத்தோடு தொடர்புடைய மதச்சார்பற்ற நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் தனித்துவம் கொண்ட சமூகநீதி மாதிரியின் மீது இந்த பிரச்சினை வெளிச்சம் பாய்ச்சுகிறது. அன்றைய சென்னை மாகாணத்தில் உருவாகிய இந்த சமூகநீதி 'மாடல்', 200 ஆண்டுகள் பழமைகொண்ட சட்டக் கட்டமைப்பிலிருந்து ஊக்கம் பெற்று இன்று வரை தொடர்கிறது. இந்த 'மாடல்' தென்னிந்தியாவில் பெரும் ஏற்பையும் பெற்றுள்ளது.



Temples of social justice

Recently, a political controversy erupted in Tamil Nadu on the issue of diverting temple funds for building colleges. Beyond the political debates, the issue throws light on a unique social justice model around the regulation of secular practices associated with religion. This model, predominantly developed in the erstwhile Madras Presidency, draws strength from a

Manuraj Shunmugasundaram

Advocate practising before the High Court of Madras and DMK spokesperson

Endowments Act. When it was introduced in the Madras Legislative Council, it faced opposition, mainly due to the provision in the law that allowed surplus temple funds to be diverted for other purposes.

The nub of the issue was whether funds provided to a temple could be used for secular purposes. The matter was debated and settled in 1925, when the law was enacted. Since then, every

and upheld by constitutional courts. Among the permissible uses of surplus funds under the 1959 Act is the establishment and maintenance of universities or colleges (Section 66). These educational institutions are also required to make available the study of the Hindu religion or Hindu temple architecture. Seen within this framework, building colleges from temple funds is not only legal, but a logical extension

1817-ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி, மத அறக் கட்டளைகள் மற்றும் அரசு வசமான சொத்துகள் ஒழுங்குமுறை (Religious Endowment and Escheats Regulation) மூலம், மத நன்கொடைகளை ஒழுங்குபடுத்தும் ஆரம்பகாலக் கட்டமைப்பை ஏற்படுத்தியது. 1858-இல் பிரிட்டிஷ் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இந்தியப் பகுதிகள் வந்தபோது, விக்டோரியா மகாராணி மத விவகாரங்களில் அரசின் தலையீட்டைக் கட்டுப்படுத்திக் கொள்வதாக அறிவித்தார். 1857-ஆம் மதப்பிரச்சினைகளால் மூண்ட சிப்பாய்க் கலகம் இத்தகைய தற்காப்பான முடிவை எட்டக் கட்டாயப்படுத்தியது.

இருப்பினும் மத விவகாரங்களில் இருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னை முழுமையாக விலக்கிக் கொள்ளவில்லை. மத நன்கொடைகளை தொடர்ந்து மேற்பார்வையிட வேண்டுமென்று சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இறுதியாக, இவ்விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு சமநிலை கொண்ட முடிவை எட்டியது: மதச் சடங்கு மற்றும் வழிபாடு போன்ற அடிப்படை நடைமுறைகளில் அரசு தலையிடாது எனவும்; ஆனால் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் மற்றும் இதர மதம்சாரா அம்சங்களை கட்டுப்படுத்தும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம்**
**கழக செய்தி தொடர்பாளர்**
**அயலக அணி இணைச் செயலாளர்**

அரசாங்கம் கோயில் நிறுவனங்களை மேற்பார்வையிடும் என்ற கருத்து 1920-இல் நீதிக்கட்சி ஆட்சியில் உறுதிபெற்றது. நீதிக்கட்சியின் முதல் சட்டப்பூர்வத் தலையீடாக 1922-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டமுன்வடிவைக் கொள்ளலாம். சென்னை மாகாண சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டபோது இம்மசோதா பலத்த எதிர்ப்பைச் சந்தித்தது, காரணம் உபரியான கோயில் நிதியை மற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம் என்று இச்சட்டம் கோரியது.

பிரச்சினையின் மையம், கோயிலுக்கு வழங்கப்பட்ட நிதிகளை மதச்சார்பற்ற நோக்கங்களுக்காகச் செலவிட முடியுமா, என்பதாக இருந்தது. இவ்விவகாரம் விவாதிக்கப்பட்டு, 1925-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டபோது தீர்க்கப்பட்டது. அதிலிருந்து தற்போது அமலில் இருக்கும் சட்டம் வரை (இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959) உபரி நிதியை ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற ஏற்பாட்டைத் தக்கவைத்து கொண்டே இருக்கின்றன.

1959-ஆம் ஆண்டு இச்சட்டத்தின் பிரிவு 36, மத நிறுவனங்களின் அறங்காவலர்கள், ஆணையரின் முன் அனுமதியுடன், சட்டத்தில் பட்டியலிடப்பட்ட எந்தவொரு நோக்கத்திற்கும் உபரி நிதிகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இங்கு, 'உபரி' என்பது கோயிலின் பராமரிப்பு மற்றும் அதன் அலுவலர்களின் பயிற்சிக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகு மீதமுள்ள தொகையைக் குறிக்கிறது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லாத சூழல்களிலும், ஏனைய காரியங்களுக்கு நிதிகளை பயன்படுத்த இணை ஆணையர் அல்லது துணை ஆணையருக்கு உரிய உரிமையை இச்சட்டம் வழங்குகிறது.

கோயில்களுக்கு வழங்கப்படும் கொடை என்பது நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது. சோழப் பேரரசு உச்சத்தில் இருந்த பொ.ஆ. 970-இல் இருந்தே அரசாங்கத்திடம் இருந்து பெரிய அளவிலான நன்கொடைகளைப் கோயில்கள் பெற்று வந்துள்ளன. வரலாற்றாசிரியர் அனிருத் கனிசெட்டி, சோழ அரசியான செம்பியன் மாதேவி, நிலமும் பொருட்களுமாக கோயில்களுக்குத் திட்டமிட்டு நன்கொடை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இந்த வழக்கம் விஜயநகர ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்துள்ளது.

கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமில்லாமல் சமூகப் பண்பாட்டு மையங்களாகவும் திகழ்ந்துள்ளன. கல்விசார் செயல்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோயில் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளும், கல்வி மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்ட பரந்த மண்டபங்களும் இந்தக் கூற்றை உறுதிப்படுத்துகின்றன. எனவே, கோயில்களின் மூல நோக்கம் கல்வி மற்றும் கலாச்சாரப் பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதாகவே இருந்துள்ளது.

1959-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டம், நீதிமன்றங்களால் சட்டரீதியாக ஆராயப்பட்டு ஒப்புதல் பெற்ற ஒன்றாக இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ் (பகுதி 66) கோயில் உபரி நிதிகளைப் கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் நிறுவவும்; அவற்றைப் பராமரிக்கவும் பயன்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனங்கள் இந்து சமயம் அல்லது கோயில் கட்டடக் கலை தொடர்பான பாடப்பிரிவுகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கோயில் நிதியைக் கல்வி நிறுவனங்களை உருவாக்கப் பயன்படுத்துவது சட்டபூர்வமானது மட்டுமல்ல இந்த சட்டப் பிரிவுகளின் தர்க்கப்பூர்வமான நீட்சியாவும் உள்ளது.

**சமூகநீதி மரபு:**

கோயில் நிதி தொடர்புடைய இந்தச் சர்ச்சையை வெறும் சட்டம் சார்ந்து மட்டும் சுருக்கிவிடமுடியாது, இது சமூக அரசியல் மற்றும் கோட்பாடு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. காலனியத்துக்கு முந்தைய கால அரசுகள் பெரிய அளவிலான நன்கொடைகளை ஆதரிக்க, அரசு வளங்களைக் கொண்டு முக்கியமான நலத்திட்டங்களைச் செயல்படுத்தக் கோயில்கள் வழிகோலியதே காரணமாக இருந்தது. காலனிய காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரிட்டிஷ் பேரரசும் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் உள்ளூரில் அதிகாரத்தை நிறுவவும் கோவில் நிதியை அரசு பராமரிப்பதை அவசியமான ஒன்றாக கருதினர்.

கடந்த நூற்றாண்டில் சென்னை மாகாணத்தில் உருவெடுத்த சுயமரியாதை இயக்கம் கோயில்களின் ஒழுங்குமுறையையும் அதன் வளங்களை நிர்வகிப்பதையும் சாதி எதிர்ப்பு சீர்திருத்தங்களைச் செயல்படுத்த முக்கியமான ஒன்றாக கருதியது. அப்படி இல்லாமல் போயிருந்தால், 1936 மற்றும் 1947-ஆம் ஆண்டுகளில் கோயில் நுழைவுச் சட்டங்களை இயற்றியிருக்கவே முடியாது. நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களுக்குப் பிறகே தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற சில மாநிலங்கள் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருந்து அர்ச்சகர்களை நியமித்துள்ளன.

இறுதியாக, கோயில் விவகாரங்களில் அரசு தலையீடு கூடாது என்ற வாதங்கள் சமூகநீதியின் அடித்தளத்தின் மீதான தாக்குதலாகவே அமையும். உபரி நிதிகளைச் சட்டப்பூர்வமான விதத்தில் ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்துவதை அரசின் தலையீடே உறுதிசெய்யமுடியும். இதனை மாற்ற முயல்வது, தென்னிந்திய மாநிலங்கள் முன்னெடுத்த சமூகநீதி மற்றும் மதச் சீர்த்திருத்தங்களின் நீண்ட பாரம்பரியத்துக்குப் பின்னடைவாகவே அமையும்.

( நன்றி – தி இந்து )
(21.07.2025)

## பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## இன்று (24.07.2025) 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

*சென்னை, ஜூலை 24-*

*பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (24.07.2025) திருவொற்றியூர் மண்டலம், வார்டு-3ல் எண்ணூர், மார்க்கெட் தெரு, அன்னை சிவகாமி நகர் 5வது தெருவில் உள்ள சமூகநலக் கூடம், மணலி மண்டலம், வார்டு-16ல் சடையான்குப்பம், அந்தோணியார் ஆலய சமூகநலக்கூடம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-96ல் அயனாவரம், பரசுராமேஸ்வரன் கோவில் தெருவில் உள்ள வெற்றி மஹால், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-129ல் சாலிகிராமம், கே.கே. சாலையில் உள்ள சுடர்மா திருமண மண்டபம், ஆலந்தூர் மண்டலம், வார்டு-160ல் சன்னியாசி சுபேதார் தெருவில் உள்ள எஸ். வி.எஸ்.ஜெயின் சங்கம், அடையாறு மண்டலம், வார்டு-171, ஆர்.ஏ.புரம், காமராஜ் சாலை, என். எஸ்.கார்டன் பகுதியில் புதிய கட்டடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.*

*இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலக முகவரி மாற்றம்!

*சென்னை, ஜூலை 23-*

*தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகம் சி.எம்.டி.ஏ வளாகம், இ & சி மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை 600 107 என்ற விலாசத்தில் 13.07.2025 வரை இயங்கி வந்தது.*

*தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான கீழ்கண்ட விலாசத்தில் 14.07.2025 முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பயனாளிகள் மற்றும் பயனடைய விரும்புவோர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பாக்கெட் VI, வாரிய அலுவலகம் மற்றும் வணிக வளாகம், சி.ஐ.டி நகர், முதல் பிரதான சாலை, சென்னை 600 035 எனும் விலாசத்தில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தினை அணுகிடுமாறு மேலாண்மை இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.*


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 127 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Submersible idler wheel with bearing housing assembly |
| 128 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Fire fighting water cooled pump with diesel engine along with all accessories for high velocity water |
| 129 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Fire fighting water cooled pump with diesel engine along with all accessories for low velocity water |
| 130 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Pipe Intermediate support for cooling water pump in NCTPS-I |
| 131 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | 1600mm Butterfly valve with worm gear box assembly for cooling water pumps |
| 144 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | SPARES FOR TRACK RAIL PATH FOR STACKER-II AND RECLAIMER-II |
| 147 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | High Performance Grinding Rollers for HP 803 Bowl Mills of Unit-II |
| 148 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | High Performance Grinding Rollers for HP 803 Bowl Mills |
| 107 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Procurement of Fan Blade Assembly for Air Oil Cooler and others |
| 108 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Procurement of 250NB Lug type butterfly valve and 80NB SS316 gate valve |
| 114 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | various sizes of variable load hanger and constant load hanger assembly |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/3789/ஒப்பந்தப்புள்ளி/2025